**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 57/2026 |
| Deposition of witness | PW- 3 /LW- 4 |
| Name | திரு. அறிவழகன் |
| Father's/Husband Name | திரு.ரெங்கசாமி |
| Village | விக்ரமம் |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 52/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 01th day of June 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் GR-I 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது விக்ரமம் கிராமத்தில் குடியிருந்து Tv Mechanic ஆக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.12.2025 காலை 10.30 மணியளவில் நானும் என் நண்பர் பழனியப்பனும் மதுக்கூர் பஸ் ஸ்டாப்-ல் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அங்கு வந்த மதுக்கூர் போலிஸார் எங்கள் ஊரை சேர்ந்த சிவக்குமார் வீட்டில் திருடுபோன வழக்கில் எதிரிகள் இருவரை பாப்பாத்திகுளம் அருகே கைது செய்துள்ளதாகவும், அதனால் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் அங்கு சென்றோம். அங்கு எதிரிகள் இருவரை போலிஸார் பிடித்து வைத்திருந்தனர். அவர்கள் இருவரும் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். பின்பு அவர்களிடம் கலர் பையில் இருந்து Laptop ஐ போலிஸார் பறிமுதல் செய்தனர். போலிஸார் எதிரிகளிடமும், எங்களிடமும் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் கலர் பை மற்றும் Laptop தான் அன்று போலிஸார் பறிமுதல் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில்

உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புதுக்கோட்டை** மாவட்ட சிறைச்சாலையில் Video Conference மூலமாக காட்டப்படும் இரண்டு எதிரிகளையும் தான் போலிஸார் எங்கள் முன்னிலையில் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று Laptop ஐ கைப்பற்றினார்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளை எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் பாப்பாத்திகுளம் அருகே. எதிரிகளிடமிருந்து எந்தெந்த பொருட்களை கைப்பற்றினார்கள் என்றால் Laptop மற்றும் ஒரு பை. நகைகள் எதாவது கைப்பற்றினார்களா என்றால் இல்லை.என் முன்னிலையில் தடயப்பொருளை கைப்பற்றவில்லை என்றாலும், கா.நி வைத்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு போலிஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை